<u>சுருக்கம்</u>

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை - அங்கன்வாடிப் பணிகள் – கருணை அடிப்படையில் பணிநியமனம் - குழந்தைகள் மையங்களில் பணிபுரிந்து வருகையில் பணியிடைக்காலமான குறுஅங்கன்வாடிப் பணியாளர்/அங்கன்வாடி உதவியாளர்களின் தகுதி பெற்ற பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் அங்கன்வாடிப் பணியாளராக பணிநியமனம் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.7(2)) துறை</u>

அரசாணை (நிலை) எண்.31

நாள்10.06.2022
திருவள்ளுவராண்டு
2053
சுபகிருது, வைகாசி 27
படிக்க.

1 அரசாணை (நிலை) எண்.110, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.7) துறை, நாள்.14.05.2012.
2 அரசாணை (நிலை) எண்.30, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (ச.ந.4) துறை, நாள்.17.08.2019.
3 இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அவர்களின் கடிதம் ந.க.எண்.7345/இ3-2/2019, நாள் 14.03.2022.

+++++

<u>ஆணை:</u>

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக்காலமான சமையலர்/சமையலர் உதவியாளர்களின் பெண் வாரிசுதாரர்களின் கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசுரிமை மற்றும் குடும்பத்தில் உள்ள பிறர் அரசுப் பணியிலிருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து சத்துணவு அமைப்பாளர்/சமையலர் பணிக்கான கல்வித் தகுதி உட்பட ஏனைய தகுதிகளை நிறைவு செய்யும் வாரிசுதாரருக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளர்/சமையலராக பணி நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் அவர்கள், மேற்கண்ட அரசாணையில் வழங்கப்பட்டுள்ள பலன்கள் போன்று அங்கன்வாடிப் பணிகளின்கீழ்

குழந்தைகள் மையங்களில் அங்கன்வாடி உதவியாளராக பணிபுரிந்து பணியிடைக் காலமானவர்களின் பெண் வாரிசுதாரர்களுக்கு அவர்களின் தகுதியின் அடிப்படையில் அங்கன்வாடிப் பணியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்ய அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:-

i. அங்கன்வாடிப் பணிகளின் கீழ் குழந்தைகள் மையங்கள்/ குழந்தைகள் குறு மையங்களில் பணிபுரிந்து வருகையில் பணியிடைக் காலமான குறு அங்கன்வாடிப் பணியாளர் / அங்கன்வாடி உதவியாளர்களின் பெண் வாரிசுதாரர்களின் கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசுரிமை (ம) குடும்பத்தில் உள்ள பிற வாரிசுதாரர்கள் அரசுப் பணியில் இருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து அங்கன்வாடிப் பணியாளர் பணிக்கான கல்வித் தகுதி உட்பட ஏனைய தகுதிகளை நிறைவு செய்யும் பெண் வாரிசுகளுக்கு அங்கன்வாடி பணிகளின் கீழ் அங்கன்வாடி பணியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

ii. அவ்வாறு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் பொழுது அரசு ஆணை (நிலை) எண்.110, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7) துறை, நாள் 14.05.2012ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தூரச் சுற்றளவு குறித்த நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

iii. அங்கன்வாடிப் பணிகளின்கீழ் மேற்கொள்ளப்படும் கருணை அடிப்படையிலான பணிநியமனங்களுக்கு அரசு ஆணை நிலை எண்.110, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள் 14.05.2012ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வயது, தூரச்சுற்றளவு போன்ற தகுதிகளை சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்கள் பொருட்டு தளர்வு செய்யப்பட வேண்டுமாயின் அதற்கான கருத்துருவை உரிய காரணங்களுடன் அரசுக்கு அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கலாம்.

iv. இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்,
தரமணி, சென்னை - 600 113.
சமூக நல இயக்குநர், சென்னை-600015.

அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்கள்,
அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள் (இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை வழியாக).

நகல்
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன்-மகளிர் உரிமை துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை - 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர், சமூக நலன்-மகளிர் உரிமை துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 14/06/2022